
ஸ்ரீ லட்சுமி நாராயணா மருத்துவகல்லூரி மற்றும் மருத்துவமனை
பன்றிகாய்ச்சல் தடுப்போம்
கபசுர குழ நீர் முகாம்
கபசுர குழ நீர்: என்றால் என்ன ?
கபசுர குழ நீர் என்பது 15 வகையான இயற்கைமூலிகைகள் கொண்டது
குழ நீரில் கொதிக்க செய்து தயாரிக்கப்படும் ஒரு வகை மூலிகை மருந்தாகும்
கபசுர குழ நீர் நன்மைகள்
இது பன்றிகாய்ச்சல் நோய் தொற்று ஏற்பட்டவர்களுக்கு நோய் எதிர்ப்பு
சக்தியை அதிகரித்து நோய்தாக்கத்திலிருந்து விரைவில் மீண்டு வர உதவுகிறது
நோய் தொற்று ஏற்படாதவர்கள் இதனை பருக நோய் எதிர்ப்புசக்தியை அதிகரித்து
நோய் தொற்றிலிருந்து தற்காத்துக் கொள்ள உதவுகிறது
கபசுர குழநீர் குழக்கும் முறை
நோய்க் கண்டவர்கள் 60 மில்லிலிட்டர் விதம் ஒரு நாளைக்கு
5 வேளை குழத்தால் நோயின் தாக்கம் குறையும் பெரியவர்கள் 60 மி.லி விதம்
ஒரு நாளைக்கு ஒரு முறை என 5 நாட்கள் தொடர்ச்சியாக குழத்துவரவும் நோய்
தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம் குழந்தைகளுக்கு 30 மி.லி விதம்
ஒரு நாளைக்கு என 5 நாட்கள் குழக்க கொடுக்கலாம்
இங்கனம்
முதல்வர்







■ லட்சுமி நாராயணா மருத்துவமனை மற்றும் கல்லூரியில் பன்றிக் காய்ச்சல் தடுப்பதற்கான கபசுர குடிநீர் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

## கபசுர குடிநீர் வழங்கும் நிகழ்ச்சி

புதுச்சேரி, மார்ச் 11–

லட்சுமி நாராயண மருத்துவ மனை மற்றும் கல்லூரி, கூடப்பாக்கம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் சார்பில் பன்றிக் காய்ச்சல் தடுப்பதற்கான கபசுர குடிநீர் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

கல்லூரி டீன் ஜெயலட்சுமி தலைமை தாங்கினார். டாக்டர்கள் சந்தான கிருஷ்ணன், பாலகுருநாதன், விஜியகுமரன், அரசு சித்த மருத்துவர் கலந்து கொண்டனர். இதில், 600க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு கபசுர குடிநீர் வழங்கப்பட்டது. கபசுர குடிநீர் தொடர்ந்து 10 நாட்கள் வழங்கப்படும்.

ஏற்பாடுகளை செவிலியர்கள் ரமேஷ், ஜெகன், மதி, மணி ஆகியோர் செய்திருந்தனர்.

